திரு. எம். சுரேந்திரன் : முதல் அமைச்சர் அவர்கள் கூறும் போது முற்பட்ட மாநிலங்கள், பிற்பட்ட மாநிலங்கள் என்று சொன்னார்கள். முற்பட்ட மாநிலங்கள், பிற்பட்ட மாநிலங்கள் என்பதற்கு என்ன அளவுகோல் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது? மக்கள் தொகையைக் கொண்டா? அல்லது பட்ஜட் வருமானத்தைக் கொண்டு தேர்ந்தெடுக்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தனி நபருடைய வருமானத்தையும், ஆங்காங்குள்ள வாழ்க்கைத்தரத்தையும் வைத்துத் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. தொழில் வளர்ச்சியுறாத இடங்கள், வளர்ச்சியுறக் கூடிய வசதி வாய்ப்பு உள்ள இடங்களுக்கு இந்தச் சலுகைகள் அளிக்கப்படுகின்றன.

திரு. சொ. காவேரிமணியம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த இரண்டு பெரும் கருத்துக்களைத் தென் மாநிலங்களிலிருந்து சென்ற மாநில முதலமைச்சர்கள் அதைப்பற்றி வலியுறுத்தி இருக்கிறார்களா, அவ்வாறு வலியுறுத்தி இருந்தால் அவர்களையும் சேர்த்துக்கொண்டு இந்த கருத்துக்களை மாநில அரசு மத்திய அரசிடத்தில் வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நாம் கோரிவருகிற மாநில சுயாட்சி என்ற கருத்தை வேண்டுமானால், மொத்தமாக மற்ற மாநிலங்களின் முதலமைச்சர்கள் இப்போது ஏற்றுக்கொள்ளவில்லை என்றாலும், காலப்போக்கில் ஏற்றுக்கொள்வார்கள் என்றாலும், மாநிலங்களுக்கு அதிகமாக அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும், இது போன்ற உரிமங்கள் அளிக்கின்ற அந்தப் பொறுப்புகள் மாநிலங்களுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்ற கருத்துக்கண் மற்ற மாநில முதலமைச்சர்கள் பெரும்பாலும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

MR. DEPUTY SPEAKER : The time allotted for question hour is over. So, I extend the question hour for some time more with the leave of the House.

Arrests at Madras

* 524 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether a number of arrests were made in Madras City on or about 27th April 1971 ; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) 27—4—1971 அன்று சென்னை மாநகரில் 65 பேர் கைது செய்யப்பட்டனர்.

(இ) கைதிகள்பற்றிய விவரம் வருமாறு :—

தடுப்புக்காவல் கைதிகள்—43.

மதுவிலக்குக் குற்றக் கைதிகள்—10.

கலவரத்தில் ஈடுபட்டுக் கைதானவர்கள்—7.

1971 சூலை 29]

பணக் கையாடல் கைதி—1.

திருட முயற்சி செய்த குற்றத்திற்காகக் கைதானவர்—1.

திருட்டுக் குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டவர்—1.

தாக்கிக் காயம் ஏற்படுத்தியதற்காகக் கைது செய்யப்பட்டவர்கள்—2.

Amount allotted to employees of Standard Motors Factory for Pongal festival

*525 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the total amount allotted to the employees of Standard Motors Factory for the Pongal Festival;

(b) whether the entire amount has been distributed; and

(c) if not, the reason therefor?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) ரூ. 1 லட்சம்.

(இ) 1,845 தொழிலாளர்களுக்கு இதுவரையில் ரூ. 92,250 பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

(உ) எஞ்சியுள்ள தொழிலாளர்கள் தங்கள் அடையாள வில்லைகளுடனும் இன்னார் எனத் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டும் இதுவரை பணம் பெற வரவில்லை.

DR. H. V. HANDE: I put this question because I received some complaints from a few persons that they have not got the amount. May I know from the Hon. Chief Minister whether any efforts have been made to trace these persons, whether it is not a fact that still a large number of persons have not been able to get into the factory and whether the Hon. Chief Minister is going to provide some arrangement for these persons who are to be employed hereafterwards and who had not yet got employment directly and whether any arrangement is going to be made to protect their position?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, இதிலே நான் ஏற்கெனவே கூறிய பதிலின் தொடர்ச்சியாக ரூ. 7,750 அவர்கள் இன்னும் பெறவில்லை. அது இப்போது வங்கியிலே வைக்கப்பட்டு, அவர்கள் பெற்றுக்கொள்வதற்கு எப்போது வந்தாலும் தருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அப்படிப் பெற்றுக்கொள்ளாமல் இருப்பவர்கள் 145 பேர் இருப்பார்கள். அந்தத் தொழிற்சாலையில் இன்னும் பலர் வேலைக்கு வைக்கப்படவில்லை என்ற நிலைமையை அரசு ஆராய்ந்து ஆவன செய்து வருகிறது. பேச்சு வார்த்தை நடந்து வருகிறது. ஆனால் பேச்சு வார்த்தைக்கு அந்தக் கம்பெனி உரிமையாளர்கள் உடன்பட்டு வராததால் அதிலே தயக்கம் ஏற்பட்டு வருகிறது. சட்டசபை நிகழ்ச்சிகள் இருந்து வருவதால் அதிலே ஈடுபட்டு, அந்தக் காரியங்களைக் கவனிக்க முடியாத நிலைமை இருக்கிறது. சட்டசபை நிகழ்ச்சிகள் முடிந்த பிறகு அதிலே கவனம் செலுத்தலாம் என்று இருக்கிறோம்.